## ஒரு மாநிலத்தின் கட்டமைப்பை மேம்படுத்துவதில் தி.மு.க. அரசைப் போன்று வேறு ஒரு அரசைப் பார்க்க முடியாது!

## முத்தமிழறிஞர் கலைஞரின் திட்டங்களை – அவர் கண்ட கனவுகளை

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மிகவும் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்!

### சென்னை கிழக்கில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற – கருத்தரங்கப்

### பொதுக் கூட்டத்தில் – திரைப்பட இயக்குநர் – நடிகை திருமதி லட்சுமி இராமகிருஷ்ணன் பேச்சு!



**சென்னை, ஆக.27–**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் – மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற, "சாதனை படைப்பது திராவிட மாடலே! சரித்திரம் படைப்பது முதல்வரின் ஆட்சியே!" எனும் மாபெரும் கருத்தரங்கில், திரைப்பட இயக்குநரும், நடிகையும், தொலைக்காட்சி நெறியாளருமான திருமதி. லட்சுமி இராமகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், "ஒரு மாநிலத்தின் கட்டமைப்பை மேம்படுத்துவதில் தி.மு.க. அரசைப்போன்று வேறு ஒரு அரசைப் பார்க்க முடியாது! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திட்டங்களை, அவர் கண்ட கனவுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.**

இப்பொதுக் கூட்டத்தில் - இயக்குநர் திருமதி. லட்சுமி இராமகிருஷ்ணன் பேசியதாவது:-

கலைஞர் அவர்களுடைய இதுபோன்ற ஒரு விழாவில். இந்த மேடையில பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நான் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அவருடைய மிகப்பெரிய ரசிகை. பெரியார் அவர்களுடைய பெரிய ரசிகை. அதனாலேயே, நான் கலைஞர் அவர்களுடைய பெரிய ரசிகை.என்னைப் பார்க்கும் போது.ஒரு முடிவு செய்துவிடுவார்கள். நமக்கு அப்படி ஒரு பழக்கம் இருக்கிறது அல்லவா...நாமே நினைத்துக் கொள்வோம். இவர் இப்படிப்பட்டவர்... இவர் இப்படி... இந்தப் பக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று எளிதாக எடை போட்டுவிடுவார்கள். அது உண்மையாக இருக்க வேண்டும் என்று இல்லை அல்லவா...எனவே, அது போன்ற பிம்பங்களை உடைப்பது மிக அவசியம்.ஏன் என்றால், சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு கலரைப் பூசும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதை எல்லாம் உடைத்துப் போடுவது மிக மிக அவசியம். அதனால். நான் இந்த மேடையை மிக முக்கியமான மேடையாக கருதுகிறேன்.

எதையும் மறக்க கூடாது என்று. கொஞ்சம் பாயிண்ட்ஸ் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். இது பக்கம் பக்கமாக செல்கிறது. அனைத்தையும் பேசினால் நாளை காலை விடிந்துவிடும் என்று நினைக்கிறேன். அதனால் மிக முக்கியமான விஷயங்களை நான் இங்கு பேசிக் கொள்கிறேன்.

அதைப் பேசுவதற்கு முன்பு. சகோதரி, தேவதை என்று ஒரு வார்த்தை சொன்னார்கள். யாரால்.அவ்வாறு இன்னொரு பெண்ணைப் பார்த்துப் பாராட்ட முடியும்? ஒரு தேவதையால் மட்டும்தான் முடியும். ஒரு பெண்ணைப் பார்த்து. இன்னொரு பெண் பாராட்டுவது.எவ்வளவு அவசியம் தெரியுமா...... என்று சொல்லுவார்கள். நான் என்னுடைய நிகழ்ச்சிக்கு வரும் பெண்களிடம் சொல்வேன். நம்முடைய எதிரிகள் ஆண்கள் கிடையாது: பெண்கள்தான் என்று.ஒரு பெண்ணைப் பார்த்து. ஒரு பெண்ணுக்கு எப்போது பாராட்ட முடியும் என்றால், அந்தப் பெண் அவ்வளவு தன் நம்பிக்கையோடு இருக்க வேண்டும். இது தான் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுபோன்று ஒரு உதாரணம் முன்வைத்த என் சகோதரி அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் பேசிக் கொண்டே இருக்கும் போது.அண்ணன் சொன்னார். "அவர்கள் பாட்டு கூட" என்றார். என்னால் நம்ப முடியவில்லை. பாட்டுஇவ்வளவு அழகாக இருப்பார்களா என்று.

அவர்கள் மிகவும் அழகாக பேசிக் கொண்டிருந்தார்கள். நான் மிகவும் ரசித்து ரசித்து அவர்கள் இருவரும் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் எல்லாம் பேசிவிட்டீர்களா என்று தெரிய

## முதல்வரின் காலை உணவுத் திட்டத்தின் ரசிகை நான்!

வில்லை. அவர்களுடைய முழுப் பேச்சை என்னால கேட்க முடியவில்லை. கொஞ்சம் தான் கேட்டேன்.ஆனால். அவ்வளவு அருமையாக பேசினார்கள்.

தமிழ்நாட்டைப் பற்றியும் தமிழ்நாட்டுப் பெண்களைப் பற்றியும். பெண்ணாக பிறந்தால் தமிழ்நாட்டில் பிறக்க வேண்டும் என்று ஒரு விஷயம் சொன்னார்கள் இல்லையா... அது எவ்வளவு உண்மை தெரியுமா! இது ஒரு மேடைக்காக-ஒரு பேச்சுக்காக பேசுவதுஅல்ல. நான் தமிழ்நாட்டில் பிறக்க வில்லை; வளரவில்லை. ஆனால்.நான் புகுந்த வீடு வந்து சேர்ந்த இடம் தமிழ்நாடு. நான் மிகவும் பெருமையாக. என் தாய் மொழி தமிழ் என்று பெருமையாக சொல்லும்போது எனக்குப் புல்லரிக்கும். எனக்கு தமிழ்நாடு அவ்வளவு பிடிக்கும். நான் எத்தனையோ வருடங்கள் வெளிநாட்டில் இருந்து.அடம் பிடித்து சண்டையிட்டு. நான்USA செல்லமாட்டேன்; நான் தமிழ் நாட்டுக்குத்தான் வருவேன் என்றுஅடம்பிடித்து வந்த ஆள் நான்.

15 வயதில் எனக்கு நிச்சயமாகி. 16 வயதில் நான் தமிழ்நாட்டுக்கு வரப் போகிறேன் என்றுதெரிந்தபோது. என் தாத்தா எனக்கு அ. ஆ. இ. ஈ புத்தகம் வாங்கிக் கொடுத்தார். அவர் என்னிடம் சொன்னார்."தமிழ்நாட்டில் இருக்கும்போது.பேருந்து போர்டு எல்லாம் வாசிக்க வேண்டும். எனவே. நீ கொஞ்சம் தமிழ் கற்றுக் கொள்" என்று. அப்போது எனக்கு தெரியாது. தமிழையும் - தமிழ் மக்களையும் நான் இவ்வளவு உயிருக்கு உயிராக நேசிப்பேன் என்று.

எனக்கு உங்களைப் எல்லாம் பார்த்தால் எவ்வளவு excitementஆ இருக்கிறதுதெரியுமா... அவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. அதுக்கு என்ன காரணம்? தமிழ்நாட்டு பெண்களுக்கு ஏன் இவ்வளவு கெத்து. அவர்கள் சொன்னார்கள்அல்லவா.வீட்டிற்கு வேலைக்கு வரும் அம்மா. அவ்வளவு தைரியமாக இருக்கிறார்கள். அந்தத் தன் நம்பிக்கை எங்கிருந்து வருகிறது? யார் கொடுக்கிறார்கள்? யோசித்துப் பார்த்தோமா? அதைக் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போமா... எங்கிருந்து வருகிறது அந்தத் தைரியம்? அந்த மாநிலத்தை ஆளும் அரசு, எப்போது ஒரு பெண்ணிடம், "நீ ஒரு பெண் பிள்ளையைப் பெற்றுக் கொள். அவ்வாறு நீ பெற்றுக் கொண்டால், அந்தப் பிள்ளைக்கு நான் பொறுப்பு. அந்தப் பிள்ளை நம் வீட்டுச் செல்வம்" என்று சொல்லும் ஒரு அரசு இருந்தால், ஏன் அந்தத் தைரியம் வராது!

நீங்கள் பாருங்களேன்... எனக்கு 60 வயது ஆகப் போகிறது.படிப்பு இருக்கிறது;தேவையான விஷயங்கள் அனைத்தும் இருக்கிறது. ஆனாலும்கூட, ஒரு பயம் வரும். நம்முடைய வயதான காலத்தில் நாம் என்ன செய்வோம்.பிள்ளைகள் பார்த்துக் கொண்டாலும், என்ன இருந்தாலும், நாம் யாரையும் சார்ந்து வாழக்கூடாது என்று ஒரு ஆசை இருக்கும் அல்லவா... அவ்வாறு இருக்கும்போது,அன்றாட வாழ்க்கையை கூலி வாங்கி ஓட்டிக் கொண்டிருக்கும் நிறைய பெண்களைநான் என்னுடைய நிகழ்ச்சியில் பார்ப்பேன். அவர்களுக்கு ஒரு வயசு வந்து, தினமும் வேலைக்குச் செல்ல முடியாது என்ற ஒரு நிலைமை வரும் போது, அது ஆயிரம் ரூபாயாகக் கூட இருக்கலாம், அந்த ஆயிரம் ரூபாய் எவ்வளவு மரியாதையும் சுயமரியாதையும் கொடுக்கும்.

நீங்கள் பார்த்தீர்கள் என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய திட்டங்களை – கனவுகளை, யார் இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்? இப்போது நமக்கு இருக்கும் நம்முடைய முதலமைச்சர், அதை மிகவும் அருமையாக சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்.

**தினசரி பிரச்சினைகள் – போராட்டங்கள்!**

இன்னொரு விஷயம் சொன்னார்கள். 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' அது எவ்வளவு முக்கியம். நான், 'சொல்வதெல்லாம் உண்மை' நிகழ்ச்சியில், அனைத்து தரப்பு மக்களையும் பார்க்கிறேன். அவர்கள் வாழ்க்கையில் இருக்கும் தினசரி பிரச்சினைகள் போராட்டங்கள் பற்றி எனக்கு தெரிய வந்தது.

அப்போது நீங்கள் ஒரு குழந்தையிடம் கேட்டீர்கள் என்றால், நான் பள்ளிக்கு செல்வதே மதிய உணவுக்காகத்தான்.அங்குதான் தொடங்குகிறது. ஆனால், அதற்காகச் சென்ற பல பெண் குழந்தைகள், இன்றைக்கு மருத்துவருக்கு படித்துக் கொண்டிருக்கிறார்கள்; காவல் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால், அப்படி ஒரு திட்டம் வந்ததினால்.

அதேபோன்று, இப்போது ஆராய்ச்சிகள் என்ன சொல்கிறது என்றால், காலை உணவு சாப்பிட்டு பள்ளிக்குச் சென்றால்தான், அவர்களுக்கு மூளைவேலை செய்யும்.குழந்தை, பசியுடன்மதியான உணவு வரை உட்கார்ந்தால், அவர்கள் மூளை வேலை செய்யாது. இரவுமுழுவதும் சாப்பிடாமல், அதனால்தான் அது 'பிரேக்ஃபாஸ்ட்'. 'ஃபாஸ்ட்'ஐ'பிரேக்' செய்வதுதான் 'பிரேக்ஃ பாஸ்ட்' சொல்வார்கள். அதை சத்துடன் அந்தக் குழந்தைக்கு கொடுக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் நம்முடைய பொறுப்பு.

குழந்தைகளுடைய கல்வியிலோ, மருத்துவத்திலோ, அடிப்படை விஷயங்களான செக்யூரிட்டியா இருக்கட்டும்; உணவாக இருக்கட்டும். அதில் எந்தக் குழந்தைக்கும் குறைபாடுகளோ, வித்தியாசங்களோ இருக்கக் கூடாது. அந்தப் பிரேக்ஃபாஸ்ட் அவ்வளவு முக்கியமான உணவு.

**பிரேக்ஃபாஸ்ட் திட்டத்தின் ரசிகை!**

அந்தப் பிரேக்ஃபாஸ்ட் திட்டத்தைப் பார்த்து, நான் மிகப்பெரிய ரசிகை ஆகிவிட்டேன். நான் பல மேடைகளில் இதை சொல்லியிருக்கேன். ஆனால், அது அரசியல் மேடைகள் கிடையாது. அந்தப் பிரேக்ஃபாஸ்ட் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்று,நாம் தினமும் அது போன்ற குழந்தைகளிடமும், பெண்களிடமும் பேசும்போதுதான் தெரியும். அவ்வளவு அழகான முக்கியமான ஒரு திட்டம். எனவே, மிக மிக... செய்ததிட்டம்அது.

அடுத்தது, விபத்து பற்றி சொன்னார்கள். நாம் பல நேரங்களில் சாலையில் செல்லும் போது, இதுபோன்று விஷயங்களைப் பார்க்கும்போது, நாம் நிறுத்த வேண்டும் என்று நினைத்தால்கூட, "சென்று தலையைக் கொடுக்காதே... தேவையில்லாமல் பிரச்சினை ஆகும்" என்று சொல்வார்கள். அப்போது நமக்கு தோன்றும். இது யாரோ பெற்ற பிள்ளையாக இருக்கலாம்; யாருடைய கணவராகவோ இருக்கலாம்; யாருடைய மனைவியாகவோ இருக்கலாம். நாம் விட்டுவிட்டுச் செல்லக் கூடாது என்று ரிஸ்க் எடுத்து செய்வோம். ஆனால், அப்போதும் மனதிற்குள் ஒரு பயம் இருக்கும்.

இந்த விஷயம் எனக்கு இன்றைக்குத்தான் தெரியும். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. ஏன் என்றால், இங்கு நல்ல விஷயங்களை எல்லாம் யாரும் பேசுவதில்லை. நல்ல விஷயங்கள் பேச வேண்டும் என்றால், இந்தப் பக்கத்து மக்கள் மட்டும்தான் பேசுவார்கள் என்று நினைக்கிறார்கள். அப்படி கிடையாது.

நான் பிறந்து வளர்ந்த பின்புலம் பார்த்தீர்கள் என்றால், ராஜாஜி அவர்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர் என்னுடையஅப்பா. எனவே, நான் அந்தப் பக்கம் சார்ந்த ஒரு பின்புலத்தில் இருந்து வந்த ஒரு பெண்.ஆனால், என் அப்பா, முத்தமிழறிஞர் கலைஞரைப் பற்றி அவ்வளவு பெருமையாகப் பேசி நான் கேட்டிருக்கிறேன். எங்கள் அப்பா ஒரு பெரியார் ரசிகர். எங்கள் குடும்பம், மெட்டி ஒலி குடும்பம் என்று அவர்கள்சொன்னார்கள் அல்லவா, பெரிய குடும்பம் ஐந்து பெண்கள், ஒரு பையன். எங்கள் அண்ணன் மூன்றாவது. அதனால் என்னுடைய அப்பா அம்மா அதற்காக முயற்சி செய்யவில்லை. ஆனாலும், நாங்களும் மெட்டி ஒலி குடும்பம்தான். எங்கள் அப்பாவுக்கு ஐந்துசகோதரிகள். எங்கள் அப்பா 15 பெண்களுக்கு திருமணம்செய்து வைத்திருப்பார்கள்.சகோதரிகள்- கசின்ஸ். இது போன்ற ஒரு குடும்பத்திலிருந்து வரும்போது, நான் அங்கு பெரியாருடைய influenceஐஙகள் குடும்பத்தில் பார்த்திருக்கிறேன். எங்கள் அப்பாவும் அம்மாவும் equal பார்ட்னர்ஸ். ஆனால், ராஜாஜியின் ஃபாலோவர்ஸ். ராஜாஜியின் ... எங்கள் அப்பா தேர்தலில் எல்லாம் நின்ற ஆள்.

அவ்வாறு இருக்கும்போது, அப்போதெல்லாம் எனக்குப் புரியவில்லை .நான் மிகவும் சிறிய பெண். பெரியதாக படிப்பு எல்லாம் கிடையாது. சிறிய வயதிலேயே கல்யாணம் செய்து சென்றுவிட்டேன். ஆனால், இப்போது பொது வாழ்க்கைக்குள் வந்ததற்குப் பிறகு, இத்தனை விஷயங்கள் நாம் கேட்டு தெரிந்து -நாம் பார்த்து தெரிந்து வரும்போது, யோசித்தோம் என்றால், இப்போது புரிகிறது.

அன்றைக்கு யார் நல்லது செய்தாலும், எந்தப் பக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதைப் பாராட்டினார்கள். தனி மனித தாக்குதல் என்ற ஒன்று இல்லை. அனைத்துமே, மக்கள் சேவை மக்களுக்காக செய்யும் திட்டம் மக்களுக்காக செயல்படும் விஷயங்கள், அதை எல்லாம் எடுத்து திறந்த மனதுடன் பேசினார்கள். அது போன்று, healthyஆன விமர்சனங்களும் இருக்கும். விமர்சனம்மிக மிக முக்கியம்.

நான் இந்தப் பக்கத்தைச் சேர்ந்த ஆள். எனவே,இந்தப் பக்கத்தில் என்ன தவறு நடந்தாலும் நான் எதுவும் பேச மாட்டேன் என்று இருக்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு அரசு நல்ல திட்டங்களை நல்ல விஷயங்களை கொண்டுவரும்போது, அதைப் பற்றி பெருமையாக உரக்கச் சொல்லிப் பாராட்ட வேண்டியது நம் கடமை. அது, அந்த அரசுக்கு இன்னும் இன்னும் ஊக்கத்தை அளிக்கும்.

**பெரியாரின் - பெண் ஏன் அடிமையானாள்? நூல்!**

நான் எங்கள் வீட்டில் இதை எல்லாம் கேட்டு வளர்ந்திருக்கிறேன். பெரியாராக இருக்கட்டும்; பெரியாருடைய பெண் விடுதலை கொள்கைகளாகட்டும். நான் 'சொல்வதெல்லாம் உண்மை' நிகழ்ச்சிக்கு வந்த போது, அந்த இயக்குநர்தான் எனக்கு 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற புத்தகத்தை கொடுத்தார். அப்போதிலிருந்து ஆரம்பித்தது எனக்கு.

அப்போதெல்லாம், எனக்கு தொடர்பு ஆனது. 30 வருடங்களுக்கு முன்பு,எங்கள் அப்பா சொன்ன விஷயங்கள் இதுதானே... இதனால்தான் அப்பா அவ்வாறு இருந்தாரோ...

ராராஜி அவர்கள் எங்கள் வீட்டில் தங்கி இருக்கிறார். அவரும் பெரியாரும் அவ்வளவு நல்ல நண்பர்கள். ஆனால்,இரண்டு பேரும் இரண்டு வித்தியாசமான கொள்கைகளில் இருந்து வருபவர்கள். ஆனால்,அவர்களிடம் தனிமனித எதிரித்தன்மையே கிடையாது. அவர்கள் இரண்டு பேரும் தனி மனிதர்களாக நல்ல நண்பர்கள். அது எவ்வளவு ஒரு healthyஆன விஷயம். இப்போது அது நமக்கு மிஸ்ஸிங்ஆக இருக்கிறது.

இப்போது யூட்யூப், சமூக வலைதளங்களைத் திறந்தீர்கள் என்றால், நமக்கு கிடைக்கும்தகவல்களில், எது உண்மை? எது அவர்களுடைய பார்வையில் மட்டும் இருக்கும்உண்மை?என்றுநம்மால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அதனால், இதுபோன்று மேடைகளில் நம்முடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்வது மிக மிக அவசியம்.

**கழக அரசு செய்த குடமுழுக்குகள்!**

இந்த அரசு இந்துக்களுக்கு எதிரானது; தமிழ்ப் பண்டிகைகளுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில்லை. இப்படியெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.... இவ்வாறு நமக்கு ஒவ்வொரு இடத்திலிருந்தும் தகவல் வருகிறது. பல விஷயங்கள் சொல்கிறார்கள். ஆனால், உண்மை என்ன?3,500 கும்பாபிஷேகங்கள் இந்த அரசு செய்திருக்கிறது என்பது எவ்வளவு பெரிய விஷயம்.

நான் வரும்போது, என்னுடன் வந்தது வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா அவர்கள். அவர் பல விஷயங்கள் என்னுடன் பகிர்ந்து கொண்டார். அவருடைய இனிமையான தமிழில், அவருடைய... மொழியில் கேட்பதற்கு அவ்வளவு அருமையாக இருந்தது. பல விஷயங்கள் நான் தெரிந்துகொண்டேன். அதற்கு மிகப்பெரிய நன்றி.

**செயல்பாபு!**

அவர்தான் எனக்கு சொன்னார், அவர் சேகர்பாபு அண்ணன் அல்ல, செயல்பாபு அண்ணன் என்று. நீங்கள் அந்த வார்த்தையைச் சொன்னால் அரங்கமே அவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்று.

இன்னொரு விஷயம், கலைஞர் அவர்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். நான் 45 வயதில்தான் தமிழ் சினிமாக்குள் வந்தேன். அது எனக்கு புதிது. சினிமாவே பார்க்கக்கூட விடாத ஒரு குடும்பத்திலிருந்து வந்தேன்.

எனக்கு கலைஞர் அவர்களைச் சந்திக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. ஒருவரைப் பார்க்கும்போது, ஒரு impression உருவாகும் அல்லவா... வெளியில் இருந்து பார்க்கும்போது, நாம் பல விஷயங்கள் கேள்விப்

## மக்களைக் காப்பாற்றும் தலைவர் என்றால், அந்தப் பயிற்சியோடு வந்த தலைவராக இருக்க வேண்டும்!

பட்டிருப்போம். ஆனால், நேரில் பார்க்கும்போது எனக்கு என்ன impression வந்தது தெரியுமா... அவ்வளவு படித்தவர்; அவர் கவிஞர் -கலைஞர்; முதலமைச்சர். இவ்வளவு இருந்தும் ஒரு பெண்ணை தனக்கு சமமாகவைத்துப் பேசும் ஒரு விஷயம் இருக்கிறது அல்லவா... அது மிகவும் நுணுக்கமான விஷயம்.அது, தமிழ்நாட்டில் தான்இருக்கிறது.பல இடங்களில் நான் சென்று பார்த்திருக்கிறேன். Even Sexல் கூட...

என்னிடம் ஒப்பனாக கேட்பார்கள். தெலுங்கில் நான் அதிகம் நடித்தது இல்லை; மலையாளப் படங்களில்அதிகம் நடித்திருக்கிறேன்; தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறேன். அந்த Production Officerஇல் இருந்து, அந்த Light Officerஇல் இருந்து,ஸ்டார்ஸ் வரைக்கும், என்னை 'அம்மா' என்றுதான் அழைப்பார்கள். அந்த 'அம்மா' என்று அழைக்கும் விஷயம் இருக்கிறது அல்லவா... பெண்களை 'அம்மா' என்று அழைப்பது மரியாதையுடன்அழைப்பது, அது தமிழ்நாட்டில்தான். எங்கே இருந்து அந்தக் கலாச்சாரம் வருகிறது? அந்த மரியாதை எங்கே இருந்து வருகிறது? அது அங்கே இருந்து வர வேண்டும். அப்போது தான் அது வரும். அது அந்த சமுதாயத்தின் இரத்த ஓட்டத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் அது வரும். அது என் மனதை மிகவும்தொட்ட ஒரு விஷயம்.

அதேபோன்று,நான் நிறைய பேட்டிகள் எடுத்தேன். அதில் எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு நபர்; இப்போது அவர் ஓய்வு பெற்றுவிட்டார்; ஏ.டி.ஜி.பி.வனிதா மேடம் அவர்களின் பேட்டி.அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார், கலைஞருடனாக அவருடைய அனுபவத்தை. அவர்களும் அதே பாயிண்ட்ஐ சொன்னார்கள்."லட்சுமி! எனக்கு மிகவும் பிடித்த விஷயம் என்னது தெரியுமா? அவர் என்னை நேருக்கு நேர் நாற்காலியில் உட்கார வைத்து, ஒரு பெண்ணை அவ்வளவு மரியாதையாக நடத்தினார். என்னால் அந்த விஷயத்தை மறக்கவே முடியாது" என்று சொன்னார்கள். அவர்கள் சொல்வார்கள் அந்தக் கதையை. அதை நான் சொன்னால் தவறாக இருக்கும். அதை அவர்கள் வாயில் இருந்து நீங்கள் கேட்க வேண்டும். அவ்வளவு அருமையான ஒரு விஷயம்.அவரை சந்திப்பதற்கான தேவை இருந்தது. பலமுறை அவருடைய அலுவலகத்திற்கு சென்றும் அது முடியவில்லை.ஆனால்,அவர் அதை நோட்டீஸ்செய்து, உள்ளேஅழைத்து,அவர் ட்ரீட் செய்த விஷயத்தைப் பற்றி சொல்வார்கள். அதை கேட்பதற்கு அவ்வளவு பெருமையாக இருந்தது.

அதேபோன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடன் பேசும் வாய்ப்பும் எனக்கு ஒருமுறை கிடைத்தது. நான் சொன்னேன் அல்லவா... நாம் பல விஷயங்கள் வெளியில் இருந்து கேள்விப்படுவோம். அதனால் நமக்கு ஒரு அபிப்ராயம் நமக்குத் தெரியாமலேயே வரும்.

அரசியல் இல்லை என்று சொல்லக்கூடாது, அனைத்திலும் அரசியல் இருக்கிறது. நான் இப்போது பேசுவதிலும் அரசியல் இருக்கிறது.

ஆனால், கொஞ்சம் பயந்து, நான் அண்ணனிடமும் அதைத்தான் சொன்னேன். சினிமாவில் எல்லாம், அரசியல்வாதிகள் என்றால், இவ்வளவு பயமுறுத்துகிறார்கள். ஆனால், நீங்கள் எவ்வளவு இயல்பாக இருக்கிறீர்கள், எப்படி அது? அதேபோன்று, காவல்துறையையும் அவ்வளவு மோசமாக காண்பிக்கிறார்கள். நான் படங்கள் எடுக்கும்போது, காவலர்களை மிகவும் நல்லவர்களாக காண்பிப்பேன்; அரசியல்வாதிகளை மிகவும் நல்லவர்களாக காண்பிப்பேன். ஏன் என்றால், மக்களுக்கு நம்பிக்கை வர வேண்டும் அல்லவா... இந்த நாட்டை ஆளுகிறவர்களையும் – இந்த நாட்டை Law & Order கொண்டு வருபவர்களையும், நாம் மட்டமாகவே காண்பித்துக் கொண்டிருந்தால், மக்களுக்கு எவ்வாறு மரியாதை இருக்கும்? மக்களுக்கு எவ்வாறு மதிப்பு இருக்கும்? வராது. பொதுமக்கள் சென்று Law & Order கொண்டுவர முடியுமா? முடியாது அல்லவா...

அதுபோன்று எனக்கு ஒரு பயம் இருந்தது. ஆனால், எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்தபோது, அவரிடம் பேசியபோது, மிகவும் அதிசயமாக இருந்தது. எவ்வாறு ஒரு மனிதன், இவ்வாறு ஒரு பொறுப்பில் இருக்கும்போது, எவ்வாறு இவ்வளவு இயல்பாக சாதாரணமாகஅவர் பேசுகிறார்? எவ்வளவு மரியாதையுடன் பேசுகிறார்! அங்கேயே எனக்கு ஒரு impression உருவாகி விட்டது. அதன்பிறகு பல விஷயங்கள்.

நான், மேடம் சுப்ரியா சாகு அவர்களுடன் ஒரு மேடையை பகிர்ந்திருந்தேன். அவர் Wildlife preservationல். காட்டு விலங்குகளின் பாதுகாப்பு, அங்கிருக்கும் திட்டங்கள், அங்கிருக்கும் விஷயங்களில் எல்லாம் எவ்வளவு தூரம் இந்த அரசு இன்ட்ரஸ்ட் காட்டுகிறார்கள்; எவ்வளவு தூரம் அதற்கு முதலமைச்சர் முக்கியத்துவம் கொடுக்கிறார்; இதெல்லாம் மிகவும் அதிசயமாக இருந்தது. ஏன் என்றால்,உலகம் முழுவதிலும் காட்டு விலங்குகளை பாதுகாப்பது; காணாமல் செல்லும் விலங்குகளை பாதுகாப்பது அவ்வளவு பெரிய பணியாக இருக்கிறது. நம்முடைய தமிழ்நாடு அரசு அதை மிகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்றாற்போன்ற ஆட்களை அதற்குரிய இடங்களில் வைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா...

ஒரு முதல்வருக்கு விஷன் மட்டும் இருந்தால் போதாது; ஒரு ஆளாக நானே அனைத்தையும் செய்வேன்; எனக்கே அனைத்து பெருமைகளும் சேர வேண்டும்; நானே தான் செய்வேன் என்றால், செயல்படவே முடியாது. அவர் சரியான ஆட்களை தேர்வு செய்து, அதற்குரிய இடங்களில் வைக்கிறார் அல்லவா... அதுதான் சரியான தலைவர்.

என்னைப் பொருத்தவரைக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் செய்த பெஸ்ட் விஷயம் எது தெரியுமா? அவருக்குப் பிறகு யார் என்பதை கிளியராக, அவர் இன்னொரு தலைவரை உருவாக்கிவிட்டார். அந்த இடம் நிறைந்திருக்கவில்லை என்றால், தமிழ்நாடு என்னவாக இருந்திருக்கும்...

இப்போது சொல்லலாம்...'வாரிசு அரசியல்' என்று சொல்லி குற்றம் சாட்டலாம். வாரிசு அரசியல் இல்லாத இடத்தில் என்ன ஆனது? வாரிசு அரசியல் என்று சொல்வது விமர்சனம். ஒரு விமர்சனம் வைக்கும் போது அதற்கான தீர்வை நீங்கள் கொடுக்க வேண்டும். அந்தத்தீர்வு இருந்ததா? எனவே, அடுத்தத் தலைவரை தலைவியை உருவாக்குவது எவ்வளவு முக்கியம். இந்தப் பேப்பரை எல்லாம் மறந்துவிட்டேன். இது மனதிலிருந்து பிளான் இல்லாமல் வந்தது.

அதேபோன்று, அந்த மேடம் சுப்ரியா சாகு அவர்களைப் பார்த்தபோது, எனக்கு என்ன பட்டது என்றால், அந்த முதல்வரின் விஷன் எப்படி இருக்கிறது? எப்பேர்பட்ட ஆட்களை அவர் கூட வைத்திருக்கிறார்.

**திறமை மிக்க லீடர்!**

ஒரு சின்ன விஷயம்... அண்ணனைச் சந்தித்தபோதும் நான் அதைத்தான் நினைத்தேன். சரியாக இந்தத் துறைக்கு இந்த அமைச்சர் எப்படி? அதைத் தேர்வு செய்து அங்கு வைப்பதற்கு ஒரு திறமை இருக்க வேண்டும். அதுதான் லீடர்.இதெல்லாம் மிகவும் அதிசயமாக இருக்கிறது. இது ஒரு பக்கம்.

நான் துர்கா அம்மா அவர்களை சந்தித்தேன். அவ்வளவு லட்சுமி கடாட்சமாக அவர்கள்தான் தேவதை மாதிரி இருந்தார்கள். அவர்கள் சிரித்து பேசிய விதம் இருக்கிறது அல்லவா... கையெடுத்து கும்பிட வேண்டும் என்பதுபோல் இருந்தது.

அதற்குப் பிறகு, எழுத்தாளர் சிவசங்கரி அம்மாவிடம் பேசினேன். துர்கா அம்மா அவர்களின் புத்தகத்திற்கு, அவர்கள் முன்னுரை எழுதியிருக்கிறார்கள். ஒரு மிகப்பெரிய அருமையான புத்தகம். நீங்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்க வேண்டும். அதில் நம்முடைய முதலமைச்சர் பற்றி ஒரு சாப்டரே இருக்கிறது. அவ்வளவு அழகான ஒரு பக்கம். அதில் ஒரு மனைவியின் பக்கத்திலிருந்து, தன் கணவரைப் பற்றி எழுதிய விஷயம் இருக்கிறது அல்லவா... அந்த மனிதரை இப்படி பார்க்கும் ஒரு இடத்திற்கு கொண்டு சென்று சேர்த்துவிட்டது.

சிவசங்கரி அம்மாவும், நானும் இதைப் பற்றி அதிக நேரம் பேசினோம். அவ்வளவு ரசித்து ரசித்து பேசினார்கள்அம்மா. அவர்களுக்கு 80 வயதிற்கு மேல் இருக்கும். எவ்வளவு அனுபவம் இருக்கும். அவர்கள் ஒரு பெண் சிங்கம். அவ்வளவு சீக்கிரம் யாரையும் அக்செப்ட் செய்யமாட்டார்கள். பெண் விடுதலைக்காக போராடிய ஒரு போராளி அவர். அவர்கள் எழுத்திற்கு அவ்வளவு பவர் இருக்கிறது.

அவர்கள் ஒரு சுவாரஸ்யமான விஷயம் பகிர்ந்துகொண்டார்கள். அதை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு ஆசைப்படுகிறேன். ஐயா கலைஞர் அவர்களுடைய ஆட்சி. அந்த நேரத்தில் கோபாலபுரத்தில் தண்ணீர் தட்டுப்பாடு.வாசலில் தண்ணீர் லாரிகளுக்கு சென்றுதான் தண்ணீர் எடுத்து வர வேண்டும்.நமக்கு இப்போது இருக்கும் முதலமைச்சர் அவர்கள் அப்போது இருக்கும் முதலமைச்சருடைய மகன், அவர் சென்று சாலையில் தண்ணீர் பிடித்து வந்து அம்மாவிற்கு கொண்டு வந்து கொடுப்பாராம்... அதேபோன்று, குழந்தைகளை குளிப்பாட்டுவது; குழந்தைகளுக்கு டிரஸ் செய்து பள்ளிக்கு அனுப்புவது. இதெல்லாமே அவ்வளவு ஈடுபாட்டுடன் அவர் செய்வாராம்...

எனவே, அங்கே அந்த பெண்ணிற்கான மரியாதையை என்ன... அதுதானே ஒரு ஆணுக்கு அழகு. அப்படித்தானே ஒரு ஆண் பாசத்தை சம்பாதிக்க முடியும். யோசித்துப் பாருங்களேன்... ஆதிக்கத்தால் ஒரு பெண்ணின் அன்பை சம்பாதிக்க முடியுமா?ஆதிக்கம் காண்பித்தால் அங்கு ஒரு பயம்; அந்தப் பயத்தினால் ஒரு அடக்கம் இருக்குமே ஒழிய, ஒரு பெண்ணுடைய மரியாதையையும் அன்பையும் சம்பாதிக்க வேண்டும் என்றால்,அந்த ஆண், அந்தப் பெண்ணுக்கு மரியாதை கொடுத்தால் மட்டும்தான் முடியும்.

அவருடன் 50 வருடம் வாழ்ந்த அந்தப் பெண் சொல்வதைவிட, ஒரு பெரிய சான்றிதழ் இந்த உலகத்தில் வேறு ஏதாவது உண்டா! அந்த இடத்தில் எனக்குப் புரிந்துவிட்டது... நாம் கேள்விப்படுவதற்கும் உண்மைக்கும் அதிக தூரம் இருக்கிறது என்று.

எனவே, நீங்கள் அனைவரும் கூடி வந்து இந்த வாய்ப்பை எனக்கு கொடுத்ததற்கு நான் மிகப்பெரிய நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

நான் முடிப்பதற்கு முன்பு, ஒரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். நமக்கு சமூக வலைதளங்கள் இருக்கிறது; யூட்யூப் இருக்கிறது; செல்போனை கையில் வைத்துக் கொண்டு ஒரு தட்டு தட்டினால், நமக்கு அனைத்துமே கிடைத்துவிடுகிறது; வாய்ப்புகள் இருக்கிறது; அரசினுடைய சலுகைகள் இருக்கிறது; அரசினுடைய சப்போர்ட் இருக்கிறது; பெண்களுக்கான பல திட்டங்கள் இருக்கிறது; இது அனைத்தையும் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் எதைப் பற்றி எல்லாம் பேசினோம். நாம் அரசியலைப் பற்றி பேசினோம்;நாம் பொருளாதாரத்தைப் பற்றி பேசினோம்; அனைத்திலும் நம்முடைய பங்களிப்பு இருக்க வேண்டும்.

ஒரு பெண் 50,60 வருடம் உழைத்து விட்டு,அதற்குப்பிறகு காலை நீட்டி உட்கார்ந்தால் அவளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? அவளுக்கு ஓய்வுகால சலுகைகள் இருக்கிறதா? பென்ஷன் இருக்கிறதா? அதற்காகத்தான் இந்த அரசு அந்தப் பெண்ணுக்கு ஆயிரம் ரூபாய் மாதம் கொடுக்கிறார்கள். அந்த ஆயிரம் ரூபாய் நமக்கு வெளியில் இருந்து பார்க்கும்போது பெரிதாக இருக்காது.

நான் கூட யோசித்தேன், எதற்கு இது? ஆனால், அந்த நிகழ்ச்சிக்கு வரும் பெண்களுக்கு, அந்த ஆயிரம் ரூபாய் எவ்வளவு பெரிய தன்னம்பிக்கையை கொடுக்கிறது... அது எவ்வளவு பெரிய விஷயம் என்பது, பிறகு நான் உணர்ந்தேன்.

எனவே, தயவு செய்து நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள், என்ன எல்லாம் திட்டங்கள் இருக்கிறது;இந்த அரசு,பெண்களுக்காக என்னென்ன செய்கிறார்கள்; அதை எல்லாம் தெரிந்து கொள்ளுங்கள். கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்;யூட்யூப்இல் பாருங்கள்.அரசு வலைதளங்களில் பாருங்கள்; நீங்கள் பார்ப்பதை மக்களிடம் பேசி தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களின் அனுபவத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

என்னுடைய கணவர், அரசியலைப் பற்றி பேசும்போது எப்போதும் ஒன்று சொல்வார். அவர் இப்போதுகூட சொல்லிக் கொண்டிருந்தார். அந்த வயதில் இருந்து, அரசியல் என்றால் என்ன? மக்களுடைய பிரச்சினைகள் என்ன? அதற்கான தீர்வுகள் எப்படி இருக்க வேண்டும்? என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்தால், இது சரியாக இயங்கும்? என்று. அனைத்திற்கும் உதாரணம் கலைஞர் அவர்கள்.

**மக்களைக் காப்பாற்றும் தலைவர்!**

இன்றைக்கு அரசியல் ஆசை வந்து, நாளைக்கு அரசியல்வாதிஆக வேண்டும் என்று நினைக்கும் காலம் இது.அதனால் மக்களுக்கு எந்தப்பயனும் இல்லை. மக்களுடைய பிரச்சினைகள் தெரியாது; மக்களுடைய பிரச்சினைகள் தெரிய வேண்டும் என்றால், ஒரு முக்கியமான பிரச்சினை வரும்போது, மக்களைக் காப்பாற்றும் தலைவர் வேண்டுமென்றால், அவர் அந்தப் பயிற்சியோடு வந்த ஒரு தலைவராக இருக்க வேண்டும். அது எந்தப் பக்கம் வேண்டுமானாலும் இருக்கலாம்; நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால், அதை இந்த அரசு மிக அழகாக தெளிவுபடுத்தி இருக்கிறது.

இப்போது இருக்கும் ஆட்சியில் ஐந்து வருடங்களாக நடந்த விஷயங்களைப் பாருங்களேன்... எவ்வளவு விஷயங்கள்! நாம் வெளியில் செல்லும்போது பார்க்கும்போது தெரிகிறது அல்லவா... கட்டமைப்பு கொண்டு வருவதில் தி.மு.க. அரசைப் போன்று வேறு யாருமே கிடையாது. நாம் ஜல்லிக்கட்டு போராட்டத்தை பற்றி அவ்வளவு பேசினோம். ஜல்லிக்கட்டுக்காக, மதுரையில் இவ்வளவு பெரிய விஷயம் கொண்டு வந்தது யார்! கீழடியைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதுபோன்று பல விஷயங்கள்.

நான் பல விஷயங்கள் இன்னும் தெரிந்து கொள்கிறேன். தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கிறது. பொதுமக்களைப் பொருத்தவரைக்கும், யாராக இருந்தாலும் காதையும் கண்ணையும் திறந்து வைத்துக் கொண்டு, தகவல்களைஅனைத்தையும் எடுத்துக் கொண்டு, நாம் முடிவு செய்ய வேண்டும்; நமக்கு எது நல்லது? நமக்கு யார் நல்லது செய்கிறார்கள்? இந்தப் பக்கம் இருப்பவர்களை குறை சொல்வது, இந்தப் பக்கம் இருப்பவர்களை நல்லது சொல்வது என்று இல்லாமல், யார் தவறு செய்தாலும் எடுத்துப் பேச வேண்டும். யார் நல்லது செய்தாலும் உரக்கச் சொல்லி பாராட்ட வேண்டும். அது நம்முடைய கடமை. அது மிக மிக முக்கியம்.

இன்னொரு விஷயம்... யூட்யூபிலும், சோசியல் மீடியாவில் வரும் அனைத்தையும் நம்பாதீர்கள்... நான் மீடியாக்குள் இருந்தே சொல்கிறேன். ஆழ்ந்து, ஆராய்ந்து,அதில் என்ன உண்மை என்று தெரிந்த பிறகு, நீங்கள் ஒரு முடிவு செய்யுங்கள். மிக மிக சந்தோசம்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.